பிஸ்மில்லா ஹி.

# முஹம்மதியா ஜாவழிக்கீர்த்தனம்.

இஃது

நபிநாயகம் அவர்கள் பேரில்,

ஸ்ரீவைகுண்டந்தாலூகா பழையகாயல் போஸ்ட்டு மாஸ்ட்டர்,

**இ. நெயினாமுகம்மது லெப்பையவர்கள்,**

பாடியது.

---

இதனை

தூத்துக்குடி மகா-ள-ள-ஸ்ரீ

கா. ரெ. பி. றஹ்மத்துல்லா சாய்பு அவர்கள் குமாரர்

R. செய்யது முகம்மது சாய்பு அவர்கள்

வேண்டுகோளின்படியும், பொருளுதவியாலும்,

தூத்துக்குடி சுப்பிரமணியவிலாசம் பிரஸ் புரொப்ரைட்டர்,

K. சிவசூரியநாராயணபிள்ளை அவர்களால்,

பதிப்பிக்கப்பட்டது.

1914-ளு டிசம்பர்மீ

[illegible]:417

# விளம்பரம்.

முஹம்மதியா ஜாவழிக்கீர்த்தனம் என்னும் இப்பெயர்புனைந்த பத புஸ்தகம் வெளிவந்திருப்பதால் சொற்பப்பிரதி அச்சிட்டிருப்பதாலும் தேவையுள்ள கனதனவான்கள் முந்திக்கொள்ளவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம், R. செய்யதுமுகம்மது சாய்பு,
தூத்துக்குடி.

நேயரிலொருவர் ஆக்கியோன்பேரிற் சொன்ன
சாத்துக்கவி.

தக்கவரும் படித்தவரும் புகழ்காயல் நன்னகரிற் சார்ந்தவரும்
மிக்கவரும் படியுடைய அறிவுடையார் லெவ்வை நெயினுமுகம்மத்
சக்கரமாம் முகம்மதியா ஜாவழியாம் கீர்த்தனமதைப்
பக்குதவியன்றியே தான்பாடி யச்சிலிட்டனரால்

இதுவுமது:— வெண்பா.

கவிதை மொழியறியான் கலக்யானம் தானறியான்
பழுதொன்றும் வாரமல் பாடுவான்—முழுமதியை
வருசைபிரு பிளவாய் வரவழைத்த நன்னபியை
பிரிசமுடனே புகழ்ந்து.

## குருவிருத்தம்,

விண்டலத்தில் நான்பாடிய பாடலை
மண்டலத்தினி லச்சி லியற்றியே
அண்டமா வெளியாக்கிய யோகனை
எண்டிசை புகழ்ந்தேற்றநீ வைப்பையே.

## முஹம்மதியா ஜாவழிக் கீர்த்தனம்.

காப்பு-வெண்பா.

காடதனில் மானையிருக்கக் கட்டிக்கொண் டேகும்
வேடன் பிணைதீர்த்தார் வேந்தரடி—நாடதனில்
எத்தினமும் நெஞ்சி லிருத்திவைத்துக் கொண்டாட
கர்த்தனே நீயிதற்கு காப்பு.

## ஆசிரிய விருத்தம்.

பூமேவு மக்கமதீனு நகர்பிரந்தாளும் புண்ணியரான நபியே
பொங்குங் குவைலீது கண்மணிக் கதீஜாவை பொருந்து மணாளர் நபியே
மாமேவு பூவுலகத்திலே தான்வாழும் மானிடற்குதவும் நபியே
மாதெனு மைமூனும் ஆயிசா யிருவரை மணம்புரிந்தாண்ட நபியே
கார்மேகம் பொழிகின்ற புருக்கானெனும் வேதம் கருதாமல்கற்ற நபியே
கஹனே ராம்ஜிபுரிஹில் முனைதவராமலே ஹக்கன் வொஹிபெற்றநபியே
நீதிமுறை தவராத நாதன் மிகு ராஜிலே நீழ்வரிசைபெற்ற நபியே
நிச்சயமாகவே எந்தனுக்கு மதுபதம் நீடுழி வாழ்கவருள் நபியே.

ஆசீன் குலத்துதித்த யாஸீன் முகம்மதென்ற வர்ணமெட்டு.

பதம்-பல்லவி.

மக்கம் மதீனம் பார் மக்கத்துப் பள்ளிபார்
ஹக்கன் திருநபியைப் பார் பார் பார் (மக்கம்)

அனுபல்லவி.

1. பக்கந் துணையாயிருந் தோரே—நீர்
ஹக்கன் கிருபை யுள்ளோரே—மிக
தற்காக்கும் நன்னபியும் நீரே—புக
ளெக்கால மானவரே தற்காத்தருள்
புரியாதேன் யேன் என் (மக்கம்)

2. காட்டு மானுக்குப் பிணைமீட்டி—துணை
கானகத்து வேடனையும் ஓட்டி—திருக்
கலிமா வெனும் பொருளையூட்டி—வெகு
காரண முடையவரே காத்துரெக்ஷித்
தருளாதேன் யேன் என் (மக்கம்)

3. அரவோடு பகர்ந்திடும் நபியே—யமா
வாசை மதியழைத்த நிதியே—மிகு
யரபிக ளரசம் பதியே—மக்கத்
தாதியதி பதியே ஆதியருள் புரியா
தேன் யேன் என் (மக்கம்)

4. கவிதைகள் பாடுமிந்தச் சிறியேன்—காயல்
கலக்யான முதற்பய னறியேன்—போஸ்ட்
மாஸ்ட்டர் செயினுமது லெவ்வையே—எங்க
ளப்துல்லா புத்திரரே நித்திய மருள்புரிய
தேன் என் யேன். (மக்கம்)

---

ஸ்ரீராமச் சந்திரனே ஸ்ரீலோக சுந்திரனே என்றவர்ணமெட்டு.

பல்லவி

தக்சபுகள் பெருகுமக்க நகர்தனிலே
ஹக்க னருளினாலே தீன் தீன் தீன்.

அனுபல்லவி.

தீன் முகம்மது தன்னுதராம்
வான்மதி யழைத்த போதராம் (தக்க)

சரணங்கள்.

1. அப்துல்லா முற்றொளிவே ஆமினார் புத்திரரே
அஹமது நன்னபியின் தீன் தீன் தீன் (தீன்—தக்)

2. தப்பிதமில்லா சரப்பு அவனுடைய
ஒப்புமிகு ராஜிலே தீன் தீன் தீன் (தீன்—தக்)

3. அஞ்சியஞ்சி எங்கள்நபி தஞ்சமுடை னாயனிடம்
கெஞ்சிவந்தா ரஞ்சிநேரம் தீன் தீன் தீன் (தீன்—தக்)

4. அந்த வகைப்படியே வந்த நமாசைத்தானும்
சிந்தைதனில் மறவார் தீன் தீன் தீன் (தீன்—தக்)

5. கஹறுபத்துல் லாவினுடைய கனக வதிஜயத்தை
கண்கொடு பார்த்தவர்கள் தீன் தீன் தீன் (தீன்-தக்)
6. அத்தஹி யாத்துக்கொண்டு அந்தமிகு ராஜிலே
யன்றிரவு காணிக்கையின் தீன் தீன் தீன் (தீன்-தக்)
7. பாத்திமா நாச்சியாரின் பாவாக வந்தவெங்கள்
பயகாம்பர் நன்னபயின் தீன் தீன் தீன் (தீன்-தக்)
8. நாளை மஹுசர்தன்னில் மூளைகள் சாடிடாமல்
வேளையில் வந்திதவுபர் தீன் தீன் தீன் (தீன்-தக்)
9. காயல் நகரில்வாழும் சாளை செயினுமதின்
கவிதைக்கு வாக்குத்தந்தவர் தீன் தீன் தீன் (தீன்-தக்)

---

மானே யானும் ஆவலாலே என்றவர்ணமெட்டு.

பதம் பல்லவி

வான்லோக நாதரே வந்தாழு ம்மந்தனே—எந்தன்
மாதரசேயுன தாசைகள்தீர நபிமருகனைத் தேடி

அனுபல்லவி—அடி.

அகிலம்புகழு மதினநகரிற் அதிமோகமான
சுகிர்த மெஞ்ஞான அஹமதேயாழும் (வான)

சரணங்கள்.

1. கால் கால மெனதுள்ள மெல்லாம்
கலங்கிவாடுதே—எங்கள்
காரணமான முஹம்மது
நபியை கருதி தேடுதே (வான)
2. சஞ்சமென் றென்போரை வஞ்சகமில்லாமல்
தர்க்காற்கும் நன்னபியை—எந்தன்
தையலே நீபோய் மையல்கள் பண்ணமல்
தயவாகக் கூடிச்செல்லே (வான)
3. கொஞ்சுங் கிளிமொழி வஞ்சிய ராமினு
குமாரர் நன்னபியை—எந்தன்
கோதையே நீபோய் வாதைகள் பண்ணமல்
கூடிச் சுகம்பெறவே (வான)
4. மக்க நகர்தனி லப்துல்லா புத்திரர்
மாதவ மானவரே—இந்த
மானில மீதி லிக்கவி பாடும்
மன்னன செயினுமதே. (வான)

பதம் பல்லவி.

வந்தருள் செய்குவீரையா வள்ளல்நபியே
வந்தருள் செய்குவீரையா புகள்நபியே
வந்தருள் செய்குவீரையா கமள்நபியே ([illegible])

அனுபல்லவி.

இந்ததிலும் கிர்ணஎழில் பெற்றநன் னபியே
சந்ததமாக வந்தோரே தாஹா நபியே (வந்)

சரணங்கள்.

1. சுந்தாம் புகள் மக்காவே—மதினாநகர்
தோன்ற லரசாய் வந்தோரே
எந்தனை யாழ்வதற்குமே—உமையன்றி
யேதொரு துணையில்லையே

கந்தாங் குடையிடும் காசிம் நபியே எங்கள்
சிந்தையுந் தேடுதையா தினந் தினமும் (வந்).

2. காதங் கமள்புயத்தோரே—மானிலத்தில்
காசி மெனவும் வந்தோரே
சாதங் கறியழைத்தோரே—தாகவிடையிற்
தண்ணீர் தவனம் தீர்த்தோரே

ஏதொரு துணையில்லா யிந்தப் பையல்தனையும்
ஆதரவாகவே தான் தினந் தினமும் (வந்)

3. அப்துல்லா நெற்றிஞெழிவே—முத்தொளி
யாமீனா யீன்றெடுத்தோரே
எத்தனை வரங்கள் பெற்றாலும்—ஒருவருக்கு
மேணிப்பணியுங் கிட்டாதே

இத்துதி எவர்க்கும் எங்கிலுங் கிட்டவில்லை
நற்றவங்கள் பெற்றோரே மிகுராஜில் (வந்)

4. இக்கவிதை பாடும் பையலாம்—செயினுமது
யிசையுங் கவிதனிலே தான்
குற்றம் பிழையிருக்கினும்—எங்கெங்கும்
நற்றோரே நீர் பொறுக்கவே

ஏவலுட னெந்தன் பாவம் பிணிகள் தீறக்
காவல் செய்திடும் நபியே தினந் தினமும் (வந்)

முன்னோர்கள் பாடிய சபைமெச்ச பதங்கள் யேட்டு பிரதி.

பதம் பல்லவி

ஏறினார் நபி புறாக்கின் மீதிலேறினார் நபி.

அனுபல்லவி.

ஏறினார் புறாக்கின் மீதிலீரிலா னுத்தாரப்படி வீருபெரும்
ஓரிறவினில் விரிசிரை கொழிஜிபுரியில் வரவே
விரிமெய்ப் பொருளிரை தரவந்தறமென
விந்தை தங்கவே கொண்டித புறாக்கினில் (ஏறி)

சரணங்கள்.

1. புர்விக்கற் சிக்கற்வான்மீன் பொலு பொலு பொலுபொலென வுதிரவே
புனைகளால் பட்டுமலை பொடி பொடி பொடி பொடிபரவே
செத்வி மிதிக்கப்படி கிடு கிடு கிடு கிடுயெனவே
செழுமுற் றருமனுமணி பெற்புரு புலிகெம்பு நெஞ்சு
நிகர்நெஞ்சு புருக்கினில் (ஏரி)

2. நபிமேற் கொள்வேபரி நடு நடு நடு நடுங்கிடவே
நாளைகியாம மேற்கொள் சொல் நல்கு நல்கு நல்கு நல்குஎனவே
குபிர்வே தருத்தநபி கொள்வம் கொள்வம் கொள்வம் கொள்வமெனவே
குணியுற்றரு முதுகின் மேற்கொள் விசைகொண்டெழும்ப
அட்ல்மண்டு புருக்கினில் (ஏரி)

3 முடிவதி லாதவனம் முதல் முதல் முதல் முதலெனவே
முதுமொழி ரகசியம் மொளி மொளி மொளி மொளிபெரவே
மடிவதி லாதவனம் மகிள் மகிள் மகிள் மகிள்குளவே
மதிசட் டொருமதி யன்னோர் பயற்பதி வந்ததெனந்
தொழுதை ஐந்தென புருக்கினில் (ஏரி)

---

மங்களபதம்—பதம்பல்லவி.

வல்லான் றாதரிற் சூலுல்லா முகம்மதாகு மங்களம்.

ஜெயமங்களம்—அனுபல்லவி.

தொல்லா ருலகமுத வெல்லாமுமே படைத்து
பல்லா ருயிரெவையும் நல்லானெனவே சொல்லும்

முடுகு.

துகிலொ டுணவுகிசம் அகிலம் உாவுபகை திணையோ
டிணையுருவ வருவவெரு வகிலிதோய்ந்த தத்துவ
மாமறையாவு யேகாந்த வஸ்துவதாமென வோதிடும் (வல்)

சரணங்கள்.

ஆதி ஒளிவதனிற் சோதிமணி யாகிய
அவிரொளிதரும் கிந்திலெனும் விளக்காயிருந்த
அதிஜயருக்கு மங்களம்.

அந்தமிகு மெக்கின் மரந்தனிற் மயிலாகி
அமர்ந்ததில் படைப்பெல்லாம் சமைந்திட பலன்தரும்
அண்ணல்தமக்கு மங்களம்

அப்துல்லா நெற்றிதனிற் முற்றொளிவா யிருந்து
ஆமீனர் வயற்றினி லவதரித்திடும்
அஹமதர்க்கு மங்களம்

ஆதம் நபிதன்பாலில் நீதியுடனுகந்து
அரங்கொழும் அமரரும் இரங்கியே தொழுதிடும்
ஆரணருக்கு மங்களம்.

பலவகை முடுகு.

அத்தனுத்தரப் படிக்கிபொர் பதிகினுத்தெரி
படித்தலத்தி லுற்றவற் றெழிற்சி நிற்ப

அற்புதத் தோடருங்க டருங்க விழங்க
வளங்கொள் ஜெகந்தனிர் வந்து பிறந்து சிறந்து
அணங்கொத் திருந்தலி மாதனம் துற்றமுர்தமுண்டு
நலம்பெற்றிட வளர்ந்து பலந்தூக்கிட வுகந்து

அப்பருங் கிருபைக் கலிமாஒப்பு தீனெரித்தொழுகை
யானது பெருக்கி புருக்கான் மறைவிளக்கி
இஸ்லா நெரிதுலக்கி குபிருனதை விலக்கி
மதினநகர் சிறக்க மக்கமாநகர் புரக்கவரும்

அருளுற்ற பிரசித்ற நல்லுத்த சொல்மெத்த
குமத்தவர் பெர்றபதி புக்கிட

கடையாகும் நாளிலே கனெடு மேபகருங்கண்
மேன்மை சிறந்தவர் ஆகமுருஞ் சரிமேயாடு பகர்ந்தவர்
ஆசில்வானவர் நேசமேகெழு பாகமுகந்து
சலாமதில் விண்டொஹியே கொடுவந்தருள்

ஆதிவேதம் ஓதும்நாவர்.

ஆணுவமிஞ்ச புசேகிலொடும் பொருள்
தேவிலா யென்பதுயே யோடினம்பர்சொல்

ஆனின் மானின் மீனினெடு.

ஆடல்கொள் வெம்புலி நீரு உடும்பொடு
பேசதுரந்தவர் வாசமிருந்தவர்
ஞனதோரி லாஹி யானுரைப்படி
புருக்குவைப்பரி ஜிபுரீல் கொடுக்கவே
அதின்மீதி லுற்றேழ் வானமும் யேகட்டியே
கபுசோடு முற்றுநீ ளருசேரி கக்கனேடுமே

பேசியுற்ற காரணர்.

அணிகள் குங்குமநல் துடையர்மங் களமநம்
நபனை மூன்பிணது தெரிவர்மங் களநம் நவமு
ருந்தமொடு மூடியமங்களமே கிழற்கலங்க
கிழயி லர்தமங்களமேயாக மேவுசிவன் யாவுமிக துதி. (வல்லான்)

முகம்மதியா ஜாவழிக்கீர்த்தனம் முற்றிற்று

இரண்டாம்பாகம் கூடியசீக்கிரத்தில் விரிவாய் வெளிவரும்.